**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்**

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.

தொலைபேசி : 044– 22201337

மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப., (ஓ)

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்.117/மா/2022**

**நாள் : 04.11.2022**

திரு. R. செந்தில்குமார்,
கம்பரசம்பேட்டை,
திருச்சிராப்பள்ளி. – முறையீட்டு மனுதாரர்

ஆணையர்,
திருச்சிராப்பள்ளி மாநகராட்சி,
திருச்சிராப்பள்ளி – எதிர்மனுதாரர்

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, கம்பரசம்பேட்டை, வடக்கு தெரு, எண்.4/2–ல் வசிக்கும் திரு. R. செந்தில்குமார் என்பவரின் 02.08.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 04.08.2022-ல் பெறப்பட்டு 117மா/2022 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, கம்பரசம்பேட்டை, வடக்கு தெரு, எண்.4/2–ல் வசிக்கும் திரு.R.செந்தில்குமார் என்பவர் தனது முறையீட்டு மனுவில், கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:

" திருச்சி மாநகராட்சி, பொன்மலை கோட்டத்திற்கு உட்பட்ட நகர சர்வே வார்டு AB பிளாக் 9 டவுன் சர்வே நம்பர் 2–க்கு கட்டுப்பட்ட இடத்திற்கு உரிய சாலை வசதிகள் ஏதும் இல்லாத நிலையில் உய்யக்கொண்டான் வாய்க்கால் கரையினை பொதுசாலையாக காண்பித்து சட்டத்திற்கு புறம்பாக திருசசி மாநகராட்சி பொறியாளர் பிரிவில் உள்ள அதிகாரிகள் பெரும் தொகையை லஞ்சமாகப் பெற்றுக்கொண்டும், முறையயக எந்தவித ஆய்வும் செய்யாமலும், நில ஆவணங்களை சரி பார்க்காமலும் வெறுமனே கண்களை மூடிக்கொண்டு மனோ ரிவேரா என்ற கட்டிட நிறுவத்திற்கு சட்ட விதிமுறைகளுக்கு புறம்பாக 117 வீடுகள் கட்டஅனுமதி வழங்கி உள்ளனர். மேலும் மேற்கண்ட இடத்திற்கு சம்மந்தப்பட்ட பத்திரப்பதிவு ஆவணங்களான ஆவண

எண்.2649/2021 மற்றும் 6407/2021 ஆகிய இரண்டு ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மேற்கண்ட இடத்திற்கான நான்கு எல்லையில் இருபுறமும் வாய்க்கால் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் திருச்சி மாநகராட்சி நகரப்பொறியாளர் அவர்கள் மாநகராட்சி சாலைகளுக்கான பதிவேட்டில் பொதுசாலை என இல்லாத ஒரு சாலையை மேற்கண்ட கட்டிட நிறுவனத்திற்காக பொய்யாக உருவாக்கி அதை SOUTH BANK CANAL ROAD என பெயரிட்டு கட்டிட அனுமதி வழங்கி உள்ளனர். இது பொய்யாக ஏற்படுத்தப்பட்ட சாலை என்பதை, திருச்சி மாநகராட்சிக்கான வரி வசூல் பதிவேட்டினை ஆய்வு செய்தாலே நகரப்பொறியாளர் செய்தது முறைகேடு என தெள்ளத்தெளிவாக தெரிய வரும். மேலும் திருச்சி மாவட்ட உள்ளூர் திட்ட குழுமம் மற்றும் நகர ஊரமைப்பு இணை இயக்குநர் அலுவலகத்திலும் மேற்கண்ட நிறுவனத்திற்கான கட்டிட அனுமதி கோப்பினை முழுமையாக, அரசின் சட்ட விதிமுறைகளுக்குட்பட்டு முறையாக கூராய்வு ஏதும் செய்யாமலும், மற்றும் ஆவணங்களை சரிவர பார்க்காமலும், சாலை வசதி ஏதும் இல்லாத ஒரு இடத்திற்கு சட்டத்திற்கு புறம்பாகவும் நகர ஊரமைப்பு மற்றும் உள்ளூர் திட்ட குழுமத்தின் கடிதத்தின்படி அனுமதி வழங்கி உள்ளனர். மேலும் மேற்கண்ட இடத்திற்கான பத்திரப்பதிவு ஆவணத்தில் பிரண்ட்ஸ் என்கிலேவ் விஸ்தரிப்பு (FRIENDS ENCLAVE EXTENSION ) என பதிவு செய்துள்ளது.

திருச்சி மாநகராட்சி ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் மத்திய அரசு வழங்கிய 17 கோடி 35 லட்ச ரூபாய் நிதியைக் கொண்டு உய்யக்கொண்டான் வாய்க்கால் கரையினை அழகுபடுத்த வேண்டும் என்ற நோக்கில் செயல்படுத்தப்பட்ட சிமெண்ட் சாலையானது, பொதுமக்களுக்கான நடைபாதையாகும் மற்றும் அதன் அருகில் பூங்காவும் அமைக்கப்பட்டது. இதில் மேற்கண்ட கட்டிட நிறுவனம் கட்டிடம் அமைப்பதற்காக அதிக பாரத்துடன் பொதுமக்களின் நடைபாதைக்காக அமைக்கப்பட்ட சாலையில் எந்தவித அனுமதி பெறாமல் கனரக வாகனங்களை இயக்கி வருகின்றனர். எனவே மேற்கண்ட கட்டிட நிறுவனத்திற்கு சாலை வசதி ஏதும் இல்லாத நிலையிலும் அந்த இடத்திற்கு பொது சாலையாக உய்யக்கொண்டான் வாய்க்கால் கரையை அதிகாரிகளுக்கு லஞ்சம் கொடுத்து பொது சாலையாக காட்டி, அரசின் கட்டிட சட்ட விதிமுறைகளுக்கு விரோதமாக 117 வீடுகள் கட்ட திருச்சிராப்பள்ளி மாநகராட்சியும், நகர ஊரமைப்பு மற்றும் உள்ளூர் திட்ட குழுமமும் வழங்கியுள்ள உத்தரவுகளை ரத்து செய்தும் மற்றும் அதிகாரத்தை தவறாக பயன்படுத்தி திருச்சி மாநகராட்சி நகர பொறியாளர் மற்றும் உள்ளூர் திட்ட குழுமம் மற்றும் நகர ஊரமைப்பு இணை இயக்குநர் ஆகிய இருவரையும் பணி நீக்கம் செய்தும் விரைவான நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

2) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான விரிவான அறிக்கையை அனுப்பக்கோரி ஆணையர், திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்கு இம்முறைமன்ற நடுவ 06.08.2022 நாளிட்ட அறிவிப்பு அனுப்பப்பட்டது.

3) மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோர் இம்முறைமன்ற நடுவ 07.10.2022 நாளிட்ட அழைப்பாணைகள் மூலம் 19.10.2022 அன்று நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு அழைக்கப்பட்டனர்.

4) மனுதாரர் 19.10.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகவில்லை.

5) 19.10.2022 அன்றைய நேரடி விசாரணையில் திருச்சிராப்பள்ளி மாநகராட்சியின் உதவி ஆணையர் மற்றும் இளநிலைபொறியாளர் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளனர்:

“திருச்சிராப்பள்ளி மாவட்டம், பொன்மலைக்கோட்டம் வார்டு AB பிளாக் எண் 9 நகரளவு எண் 2ல் பிளாக் 1 மற்றும் 2ஆக அடுக்குமாடிக் கட்டிடம் கீழ்தளம் மற்றும் 5 தளங்களுடன் கூடிய 117 குடியிருப்புகள் கொண்ட கட்டுமானத்திற்கு ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் மூலம் திட்ட அனுமதி இசைவு அளிக்கப்பட்டுள்ளது என்கின்ற விவரத்தை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம். மேற்கண்ட அடுக்குமாடி குடியிருப்புகள் திருச்சிராப்பள்ளி மாநகராட்சியின் உள்ளூர் திட்டக்குழுமம் வழிகாட்டுதல் மற்றும் விதிமுறைகளைப் பின்பற்றியும் நீர்பாசனத்துறை தார்சாலையை உபயோகிக்க வழங்கப்பட்ட அனுமதியின் பேரில் மட்டுமே மாநகராட்சியால் கட்டட அனுமதி வழங்கப்பட்டது. மேற்கண்ட அடுக்குமாடி குடியிருப்பு தற்போது தளம் அளவிலேயே முடிக்கப்பட்டுள்ளன. முழுவதுமாக கட்டி முடிக்கப்படவில்லை. மேலும் மேற்கண்ட அடுக்குமாடி குடியிருப்புகள் கால்வாய் புறம்போக்கில் கட்டப்படவில்லை என்கின்ற விவரத்தையும், மேலும் அக்குடியிருப்புகள் பட்டா இடத்தில் தான் கட்டப்பட்டுள்ளது என்கின்ற விவரத்தையும் இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம். இந்நிகழ்வு தொடர்பான நீர்வள ஆதாரத்துறையிலிருந்து பெறப்பட்ட NOC நகல் மற்றும் LPA நகல் ஆகியவற்றை இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்கிறோம். உதவி ஆணையாளரான எனது 19.10.2022 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எங்களது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறோம்” என தெரிவித்துள்ளனர்.

6) திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஆணையர் தனது 19.10.2022 நாளிட்ட கடிதத்தில் கீழ்ககண்டவாறு தெரிவித்துள்ளார்:

“ நகரளவு எண் 2, பிளாக் 9, வார்டு AB இடத்திற்கு ஆர். கார்த்திக் அவர்களுக்கு திடட அனுமதி இணை இயக்குனர்/உறுப்பினர் செயலர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலவலகம், திருச்சிராப்பள்ளி அவர்களால் திட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. பொதுப்பணித்துறைக்கு சொந்தமான உய்யகொண்டான் வாய்க்கால் கரை சாலையினை செயற்பொறியாளர் பொதுப்பணித்துறை நீர்வள ஆதார துறையின் அனுமதியின்படி நகரளவு எண் 1,6, பிளாக் 9 வார்டு AB உள்ள சாலையை பயன்படுத்திக்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் மாநகராட்சிக்கு சாலை ஒப்படைப்பு ஆவணம் 7179ன்படி அயிட்டம் 1 பொதுப்பாதை இடம் 1764.48 ச.மீ. (அல்லது) 18992.90 ச.அடிகள், அயிட்டம் 2 பொதுப்பாதை இடம் 505.84 ச.மீ அல்லது 5444.80 ச.அடிகள், அயிட்டம் 3 பொது உபயோக ஒதுக்கீடு திறவிடம் (OSR) 297.22 ச.மீ. அல்லது 3199.30 ச.அடிகள் ஆக மூன்று அயிட்டங்களின் கூடுதல் 2567.54 ச,மீ. அல்லது 27637 ச.அடிகள்

மாநகராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டதன் அடிப்படையில் தான் மாநகராட்சியால் கட்டிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்ற விவரம் சமர்ப்பிக்கப்படுகிறது" என தெரிவித்துள்ளார்.

7) முறையீட்டு மனுதாரரின் மனு, திருச்சிராப்பள்ளி மாநகராட்சி உதவி ஆணையர், இளநிலைபொறியாளரின் வாக்குமூலங்கள் மற்றும் உதவி ஆணையரின் அறிக்கை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு பின்வரும் விவரங்கள் கண்டறியப்பட்டுள்ளன:

மனுதாரர், திருச்சி மாநகராட்சி, பொன்மலை கோட்டத்திற்கு உட்பட்ட நகர சர்வே வார்டு AB பிளாக் 9 டவுன் சர்வே நம்பர் 2–க்கு கட்டுப்பட்ட இடத்திற்கு உரிய சாலை வசதிகள் ஏதும் இல்லாத நிலையில் உய்யக்கொண்டான் வாய்க்கால் கரையினை பொதுசாலையாக காண்பித்து சட்டத்திற்கு புறம்பாக திருச்சி மாநகராட்சி பொறியாளர் பிரிவில் உள்ள அதிகாரிகள் பெரும் தொகையை லஞ்சமாகப் பெற்றுக்கொண்டும், முறையாக எந்தவித ஆய்வும் செய்யாமலும், நில ஆவணங்களை சரி பார்க்காமலும் கண்களை மூடிக்கொண்டு மனோ ரிவேரா என்ற கட்டிட நிறுவனத்திற்கு சட்ட விதிமுறைகளுக்கு புறம்பாக 117 வீடுகள் கட்டஅனுமதி வழங்கி உள்ளனர். மேற்கண்ட கட்டிட நிறுவனத்திற்கு சாலை வசதி ஏதும் இல்லாத நிலையிலும் அந்த இடத்திற்கு பொது சாலையாக உய்யக்கொண்டான் வாய்க்கால் கரையை அதிகாரிகளுக்கு லஞ்சம் கொடுத்து பொது சாலையாக காட்டி, அரசின் கட்டிட சட்ட விதிமுறைகளுக்கு விரோதமாக 117 வீடுகள் கட்ட திருச்சிராப்பள்ளி மாநகராட்சியும், நகர ஊரமைப்பு மற்றும் உள்ளூர் திட்ட குழுமமும் வழங்கியுள்ள உத்தரவுகளை ரத்து செய்யும் மற்றும் அதிகாரத்தை தவறாக பயன்படுத்தி திருச்சி மாநகராட்சி நகர பொறியாளர் மற்றும் உள்ளூர் திட்ட குழுமம் மற்றும் நகர ஊரமைப்பு இணை இயக்குநர் ஆகிய இருவரையும் பணி நீக்கம் செய்யும் விரைவான நடவடிக்கை எடுக்க இம்முறைமன்ற நடுவத்தை கோரியுள்ளார்.

மனுதாரர் தன்னுடைய புகார் மனுவில் சட்டத்திற்கு புறம்பாக மனோ ரிவேரா நிறுவனத்திற்கு கட்டிடம் கட்ட அனுமதி அளித்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார். ஆனால், அதற்கான ஆதாரம் ஏதும் மனுதாரரால் அளிக்கப்படவில்லை.

இந்நேர்வில் நகரளவு எண் 2, பிளாக் 9, வார்டு A B இடத்திற்கான திட்ட அனுமதி, இணை இயக்குநர்/உறுப்பினர் செயலர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருச்சிராப்பள்ளி அவர்களால் வழங்கப்பட்டுள்ளது. நீர்வளஆதாரத்துறைக்கு சொந்தமான உய்யக்கொண்டான் வாய்க்கால் கரை சாலையினை பயன்படுத்திக்கொள்ள செயற்பொறியாளர் பொதுப்பணித்துறை நீர்வள ஆதார துறை அவர்களால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் மாநகராட்சிக்கு சாலை ஒப்படைப்பு ஆவணம் 7179ன்படி அயிட்டம் 1 பொதுப்பாதை இடம் 1764.48 ச.மீ. (அல்லது) 18992.90 ச.அடிகள், அயிட்டம் 2 பொதுப்பாதை இடம் 505.84 ச.மீ அல்லது 5444.80 ச.அடிகள், அயிட்டம் 3 பொது உபயோக ஒதுக்கீடு திறவிடம் (OSR) 297.22 ச.மீ. அல்லது 3199.30 ச.அடிகள் ஆக மூன்று அயிட்டங்களின் கூடுதல் 2567.54 ச,மீ. அல்லது 27637 ச.அடிகள் மாநகராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டதன் அடிப்படையில்தான் மாநகராட்சியால் கட்டிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்பதை திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஆணையரின் அறிக்கை வாயிலாக அறிய முடிகிறது. மனோ ரிவேரா நிறுவனத்தால் கட்டப்பட்டு வரும் அடுக்குமாடி குடியிருப்பு அனுமதி அளித்தவாறு கட்டப்படுகிறதா

என்பதை கள ஆய்வு செய்து, உறுதிபடுத்திக்கொள்ளுமாறு திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஆணையரை இம்முறைமன்றம் அறிவுறுத்துகிறது.

மனுதாரர் திரு.R.செந்தில்குமார் அவர்கள் இம்முறைமன்ற நடுவத்தின் அழைப்பானையின் பேரிலும், தொலைபேசி வாயிலாக பலமுறை விசாரணைக்கு உரிய நேரத்தில் ஆஜராகுமாறு அறிவுறுத்தியும் இம்முறைமன்றத்தில் நடைபெற்ற நேரடி விசாரணைக்கு ஆஜராகாமல் இருந்துள்ளார். இதுபோன்ற நடைமுறைகளை இனி வரும் காலங்களில் தவிர்க்குமாறும் தம்மால் அளிக்கப்படும் புகார் மனுக்கள் குறித்து மேற்கொள்ளப்படும் நேரடி விசாரணைகளின் பேரில் நேரில் ஆஜராகுமாறு அறிவுறுத்தப்படுகிறார். இதனால் மனுதாரர் இம்முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பப்படும் மனுக்கள் இனி **6 (ஆறு)** மாதங்களுக்கு ஏற்கப்படாது என்று மனுதாரருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

2022-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 04-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திரு. R. செந்தில்குமார்,
   த/பெ. ராமலிங்கம்,
   எண்.4/2, வடக்கு தெரு,
   கம்பரசம்பேட்டை,
   திருச்சிராப்பள்ளி – 6201 101.
2. ஆணையர்,
   திருச்சிராப்பள்ளி மாநகராட்சி,
   திருச்சிராப்பள்ளி.
3. துணை ஆணையர்,
   திருச்சிராப்பள்ளி மாநகராட்சி,
   திருச்சிராப்பள்ளி.
4. உதவி ஆணையர்,
   ஸ்ரீரங்கம் கோட்டம்,
   திருச்சிராப்பள்ளி மாநகராட்சி,
   திருச்சிராப்பள்ளி.
5. நகராட்சி நிர்வாக இயக்குநர்,
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம்,
   சென்னை – 600 028.

6. இணை இயக்குநர்
   ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம்,
   சென்னை – 600 028.

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்